# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 19.11.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் அதிகாரம் அல் அன்கபூத் -ன் 59, 60 வது வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள்: நம்பிக்கை கொண்டு நற்செயல்களாற்றுபவர்களுக்கு நிச்சயமாக நாம் சுவர்க்கத்திலுள்ள உயர்தரமான மாளிகைகளில் வாழ இடமளிப்போம். அதன் கீழ் ஆறுகள் ஓடும். அவர்கள் அதில் என்றென்றும் வாழ்ந்து வருவர். (நற்)செயல் ஆற்றுபவர்களுக்குரிய பிரதிபலன் மிகச் சிறந்ததாயிருக்கும்.**

**(நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களாகிய) அவர்கள் (தங்கள் கொள்கைகளிலும், செயல்களிலும்) உறுதியாக நிலைத்து நிற்பார்கள். மேலும் அவர்கள் தங்கள் இறைவனிடமே நம்பிக்கை வைப்பார்கள். (29:59,60)**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய இறுதி நபி ஆவார். அன்னாருடன் மார்க்கம் முழுமையடைந்து விட்டது. இந்த மார்க்கத்தின்படி அமல் செய்வதன் மூலமாகவே ஒருவர் இறைதிருப்தியைப் பெற முடியும்.

சஹாபாக்கள் தமது ஈமானின் சுவையை உணர்ந்த போது அவர்களின் ஒவ்வொரு அசைவும் அமைதியையும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காகவே ஆகி விட்டது. எந்த செயல் அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்படுமோ அதுவே ஸாலிஹ் ஆன செயல் என்று கூறப்படும்.

எனவே இந்த வசனங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மையாக்கும் ஆற்றலின் மூலம் பெரும் புரட்சியை ஏற்படுத்திய மக்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அம்மக்கள் தமது பழைய தீய பழக்கவழக்கங்கள் அனைத்தையும் விட்டு விட்டு தமது ஈமானில் உறுதியாக நின்றனர்.

ஈமான் உறுதிபெறவும் நற்செயல்களைச் செய்யவும் பெரும் பெரும் தியாகங்களையும் செய்யத் தயாராக இருப்போம் என்று நிரூபித்துக் காட்டினர்.

அமைதியாக கொடுமைகளை சகித்துக் கொள்ள நேர்ந்தாலும் அவ்வாறு செய்வோம். ஏனெனில் ஒரு காலத்தில் கொடுமைகளுக்குப் பதிலடி கொடுக்க அனுமதியளிக்கப்படவில்லை. அப்போது ஈமானில் உறுதி ஏற்படுவதற்கு அவர் அமைதியுடன் கொடுமைகளை எதிர்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்போது கொடுமைக்கு எதிராக கொடுமையிழைக்காமல் இருப்பதே அஃமலே சாலிஹா (நற்செயல்) வாக இருந்தது. நாட்டை விட்டு விட்டு ஹிஜ்ரத் (இடம்பெயர்ந்து) செல்லுமாறு கட்டளை வந்ததும் எந்தவித மறுப்புமின்றி நாட்டை விட்டு விட்டு வெளியே செல்ல வேண்டியதிருந்தது.

பிறகு எதிரிகளுக்கு தண்டனை கொடுப்பதற்காக யுத்தம் செய்ய கட்டளை வந்ததும் ஈமானின் எதிர்பார்ப்பு மற்றும் அஃமாலே சாலிஹா என்பது எந்த விளைவையும் பொருட்படுத்தாமல் எதிரிகளுக்கு தண்டனை கொடுப்பதாக இருந்தது. அப்போது என்னிடம் ஆயுதம் இருக்கிறதா இல்லையா? எதிரிகளின் பலம் என்ன? எமது பலம் என்ன? என்றெல்லாம் பார்க்கக் கூடாது. ஈமான் கொண்ட பிறகு அமல் என்பது அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ப இருப்பதே ஆகும். தனது உயிரை மனிதன் இறைவனது அமானிதமாகக் கருத வேண்டும். இதனைத்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் செய்தனர். உடனே இறைவன் கூறினான். அத்தகையோரை நான் நிச்சயமாக சொர்க்கத்தில் நுழையச் செய்வேன். சொர்க்கத்திலும் கூட உயர்ந்த இடத்தில் வைப்பேன். கீழே ஆறுகள் ஓடும். இந்த ஜன்னத்துகள் நிரந்தர வெகுமதி மற்றும் நிரந்தர வாழ்விற்கான அடையாளம் ஆகும்.

அல்லாஹ் கூறுகிறான்: இதுவே மிகச் சிறந்த கூலியாகும். அந்த கூலியை இறைவனுக்காகவே ஒவ்வொரு செயல்களையும் செய்பவர்களுக்காக தருகிறோம். அம்மக்கள் மிகச் சிறந்த நிலையான ஜன்னத்தின் கூலியைப் பெறுபவர்கள் ஆவர். இம்மக்களே அளவற்ற பொறுமையுடன் தியாகங்களைச் செய்தவர்கள் ஆவர். தமது ஈமானை சலாமத்துடன் வைத்துக் கொண்டவர்கள் ஆவர்.

தமது ரப்பின் மீது முழுமையான தவக்குல் வைத்தவாறு நாம் பொறுமையின் முன்மாதிரியைக் காட்டியவாறு ஈமானைப் பாதுகாத்தோம். மேலும் ஒவ்வொரு அமலையும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காகவே செய்து வந்தோம். எனவே இறைவனும் உண்மையான வாக்குறுதி வழங்குபவனாவான். நிச்சயமாக நற்கூலி வழங்குபவனாவான் என்ற உறுதியில் நிலைத்து நின்றனர்.

இந்த ஈமானில் உறுதியுடன் நற்செயல் செய்வதில் கவனம் (ஆகிய) அனைத்தும் சஹாபாக்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றல் மூலமாக உருவானது.

இன்று நான் பொறுமை சம்பந்தமான சில ஹதீஸ்களை எடுத்து வைப்பேன். அதிலிருந்து மூஃமின்களிடம் இந்த (பொறுமை என்ற) நற்குணத்தை உருவாக்குவதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னென்ன வழிகளைக் கற்றுத் தந்துள்ளார்கள் என்று தெரிய வரும்.

சஹாபாக்களும் தமது ஈமானில் ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டே சென்றனர். அல்லது செல்லக் கூடியவர்களாக இருந்தனர். அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எந்த அளவுக்கு பொறுமையின் உயர்தகுதியை எட்டியிருந்தார்கள்! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் கூட அன்றாட காரியங்கள் முதல் எதிரிகளுக்கு எதிராக காட்ட வேண்டிய நடைமுறை வரை அனைத்து மட்டங்களிலும் பொறுமையைக் கடைபிடிக்குமாறு கற்பித்தவாறு நமக்கு போதனை செய்தார்கள். எந்த வேளையில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று போதித்தார்கள். இன்று நான் முதலில் ஒரு ஹதீஸை எடுத்து வைப்பேன். இந்த ஹதீஸ் எதிரிகளுக்கு முன்னால் காட்ட வேண்டிய பொறுமை பற்றியதாகும்.

குடும்ப வாழ்வில் கணவன் மனைவி ஒருவர் மற்றவரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? பல பெண்களிடமிருந்து எனக்கு கடிதங்கள் வருகின்றன. மேலும் சந்திக்க வாய்ப்பு கிடைத்தாலும் நம்மிடம் புகார் கூறுகிறார்கள்.

உதாரணமாக, மகன் இல்லை. மகள்கள்தான் இருக்கின்றனர். இதன் காரணமாக கணவரும் மாமனார் வீட்டாரும் தொல்லை கொடுக்கின்றனர். எமது வாழ்வே கசந்து போய் விட்டது. சிலவேளை மகள்களிடமிருந்தே கடிதம் வருகிறது. எமது தந்தையார் எங்களுடன் நாங்கள் மகள்கள் என்ற காரணத்தால் நல்ல நடைமுறை காட்டுவதில்லை. எமது வாழ்வு நிரந்தரமாக துன்பத்தில் உழல்வதாகி விட்டது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸை இது சம்பந்தமாக உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். ஏனெனில் பலர் மார்க்க அறிவு படைத்தவர்களாவீர்கள். ஜமாஅத் பணிகளும் கூட செய்கின்றனர். பிறகும் கூட வீட்டில் அவர்களது நடைமுறை நன்றாக இருப்பதில்லை.

இந்த ஹதீஸை கேட்ட போது மனிதனுக்கு சிறிதளவாவது ஈமானின் சுவை உணர்ந்திருந்தால் மகள்களுக்கு துன்பம் தர காரணமாக இருக்கமாட்டார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மக்கள் மூலமாக ஒருவர் சோதிக்கப்பட்டு அதனை அவர் பொறுமையுடன் சகித்துக் கொண்டால் அந்த மகள்கள் அவருக்கும் நெருப்புக்குமிடையில் தடையாகி விடுகின்றனர்.

சிறு சிறு தவறுகள் கூட உலகில் செய்யாத மனிதன் யார்? எந்த மனிதன் அதனை விட்டு இறைவனது பாதுகாப்பில் வரவிரும்பமாட்டார்? ஒவ்வொரு மனிதரும் நிச்சயமாக அந்த பாதுகாப்பை விரும்புவார். பிறகு பெண் குழந்தைகளை மட்டும் பெற்றவர்களுக்கு நற்செய்தி! மூஃமின் பெண் குழந்தைகளால் அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருகிறார். சில பிரச்சனைகள் உருவாகின்றன. அவை தீர்க்கப்பட வேண்டும். பெரிய

பிரச்சனைகள் பெண் குழந்தைகளால் ஏற்படுகின்றன. எந்த வகையிலும் அதனை பெண் மக்களிடம் காட்டக் கூடாது. மகள்களின் காரணத்தால் அதன் தாய்மார்களை குறி வைக்கக் கூடாது. இது ஒரு மூஃமினின் அடையாளமாகும். அவரது இந்த நற்செயல் அவருக்கும் நெருப்புக்கும் இடையில் தடையாக அமைந்து விடும்.

ஒரு ஹதீஸில் சிறு விஷயங்களில் கூட முன்கோபம் கொள்பவர்களைப் பற்றி வருகிறது. இவர் அறிவிப்பு செய்கிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு முஸ்லிம் மக்களுடன் சுமூகமாக பழகி பேச்சுகளுக்கிடையில் உருவாகும் கஷ்டங்களையும் வார்த்தைகளையும் பொறுத்துக் கொள்கிறார். அம்மனிதர் மற்றவர்களுடன் சுமூகமாக பழகாமலும் மக்களின் இடர்தரும் சொற்களை சகிக்காமலும் இருப்பவரை விட சிறந்தவராவார். சுமூகமாகப் பழகுவதன் மூலம் மற்றவரது சீர்திருத்தத்திற்கு காரணமாகி விடுவார். பிறகு இந்த பொறுமையின் காரணத்தால் மனிதனது பக்குவம் விரிவடைகிறது. இது அவரை மேலும் பல நன்மைகளைச் செய்ய காரணமாக்கி விடுகிறது. பிறகு இதில் போதனையும் உள்ளேயே வந்து விட்டது. மனிதன் பொறுமையை தனக்குள் கொண்டு வர வேண்டும். சிறு சிறு விஷயங்களுக்காக இந்த பக்குவநிலை குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு அறிவுரை கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

மற்றவரை வீழ்த்துபவன் வீரனல்ல. மாறாக கோபம் வரும் போது தன்னை கட்டுப்பாட்டிற்குள் வைப்பவனே வீரன் ஆவான்.

எனவே இறைவன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய பார்வையில் வீரர் என்பவர் தனது கோபத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவரே ஆவார். இதுவே அமலே சாலிஹா ஆகும். இந்த செயல்தான் ஒரு முஃமினுக்கு இறைநெருக்கத்தை பெற்றுத் தரும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சொந்த, உன்னத நடைமுறையும் கூட உள்ளது. அதுபற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது கையால் யாரையும் அடித்ததில்லை. அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்யும் போது எவரையும் கொன்றிருந்தால் தவிர எந்த பெண்ணையும் அடித்ததில்லை. எந்த பணியாளையும் அடித்ததில்லை.

அவர்களுக்கு எவராவது கஷ்டம் கொடுத்தார்கள் எனில் அதற்கும் கூட ஒருபோதும் பழிவாங்கியதில்லை. அல்லாஹ்வின் கண்ணியத்திற்குரிய அந்தஸ்திற்கு ஏதாவது அவமரியாதை செய்யப்பட்டால் அதற்காக மட்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்காக பழிவாங்கினார்கள்.

இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியாகும். இது நமக்கு பொறுமையின் அசல் படத்தை நம்முன் எடுத்து வைக்கிறது.

ஒரு ஹதீஸில் வருகிறது. அபுகப்ஸா அன்சாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன். நான் மூன்று விஷயங்களைக் குறித்து உங்களுக்கு கவனமூட்டுகிறேன். நீங்கள் அதனை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். ஸதகாவினால் ஒருவரது பொருள் குறைவதில்லை. ஒரு மனிதன் அநீதியிழைக்கப்பட்டு அதனை பொறுத்துக் கொண்டால் அல்லாஹ் அவரது கண்ணியத்தை உயர்த்துகிறான். ஒரு மனிதன் யாசிப்பவருக்காக தனது வாசலைத் திறந்தால் அவருக்காக அல்லாஹ் பொறுமையின் வாசலை திறக்கின்றான்.

இதனையும் நான் பொறுமை சம்பந்தமாக கூற விரும்புகிறேன். நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். ஓர் அநீதியிழைக்கப்பட்டவர் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக பொறுமை காட்டினால் அல்லாஹ்விடம் எந்த அளவுக்கு அது ஒப்புக் கொள்ளத்தக்கது எனில் அல்லாஹ் அவரது கண்ணியத்தை தானே நிலைநாட்டுகிறான்.

நமது சமூகத்தில் அன்றாடம் தோன்றும் பிரச்சனைகளில் இந்த அசல் விஷயத்தை புரிந்து கொள்ளுங்கள். அதனால் அமைதி நிறைந்த ஒரு சமூகம் உருவாகும்.

பிறகு இன்னொரு அறிவிப்பில் வருகிறது.

உமர் பின் ஸஅத் தனது தந்தையார் ஸஅதியிடமிருந்து அறிவிக்கிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: முஸ்லிம்களைப் பற்றி எனக்கு வியப்பு ஏற்படுகிறது. காரணம் அவருக்கு ஒரு நல்லது நடந்தால் இறைவனுக்கு ஹம்து (புகழ்ச்சி) மற்றும் நன்றி கூறுகிறார். அவருக்கு ஒரு தீயது நடந்தால் அதன் பொருட்டு தனக்கு நற்பலன் கிடைக்கும் என்று நம்பிக்கை வைக்கிறார். பொறுமையை மேற்கொள்கிறார். முஸ்லிமுக்கு ஒவ்வொரு நிலையிலும் நற்கூலி கிடைக்கிறது. தனது மனைவியின் வாயில் போடுகிற ஒரு கவளம் உணவுக்குக் கூட நற்பலன் பெறுகிறார்.

இன்னொரு அறிவிப்பிலும் இதன் விளக்கம் வருகிறது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஃமினுடைய நடைமுறை மிகவும் வியப்புக்குரியது. அவரது எல்லா செயல்களும் பரக்கத்திற்கு மேல் பரக்கத் ஆகவே இருக்கின்றன. இந்த அருள் ஒரு முஃமினுக்கு மட்டுமே உரியதாகும். அவருக்கு ஒரு மகிழ்ச்சி கிடைத்தால் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறார். இது அவருக்கு மேலும் நலனும் வளமும் கிடைக்கக் காரணமாகிறது. அவருக்கு ஒரு துக்கம், சங்கடம், நஷ்டம், நெருக்கடி ஏற்பட்டால் அவர் பொறுமை மேற்கொள்கிறார். அவரது நடைமுறையே அவருக்கு நலனும் வளமும் கிடைக்க காரணமாகிறது. ஏனெனில் அவர் பொறுமை செய்து நற்பலனைப் பெறுகிறார்.

பிறகு ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிமுக்கு ஒரு கஷ்டம், துக்கம், கவலை, வேதனை, பிரச்சனை, ஏன் அவரது காலில் குத்தும் ஒரு முள் கூட அவருக்கு நற்பலனை வழங்கக்கூடிய பரிகாரமாக ஆகாமல் வருவதில்லை.

இன்னொரு நீண்ட அறிவிப்பில் இறைவனுக்கு பிடித்தமானவர்கள், பிடிக்காதவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அதனை எடுத்து வைக்கிறேன். முதர்ரிஃப் பின் அப்துல்லாஹ் அறிவிக்கின்றார். எனக்கு அபூஸர் (ரலி) அவர்கள் கூறியதாக ஒரு அறிவிப்பு கிடைத்தது. நான் அபூஸர் (ரலி) அவர்களை சந்தித்த போது அவரிடம் கேட்டேன். அபூஸர்ரே! உங்களது அறிவிப்பு என்னை வந்து சேர்ந்துள்ளது. உங்களை சந்தித்தால் அதுபற்றி உங்களிடம் கேட்க வேண்டும் என்று விரும்பியிருந்தேன்.

அபூஸர் (ரலி) அவர்கள், என்னை சந்தித்து விட்டீர்கள். சரி, இப்போது கேளுங்கள் என்றார்கள். நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறக்கேட்டதாக சொன்னார்கள். மூன்று வகையான மனிதர்களை அல்லாஹ் விரும்புகிறான். மேலும் மூன்று வகையான மனிதர்களை அல்லாஹ் விரும்புவதில்லை.

ஆம்! அவ்வாறு கூறக் கேட்டேன் என்று அபூஸர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எமது உற்ற நண்பர் (ஸல்) அவர்கள் மீது பொய் சொல்வதை என்னால் கற்பனை கூட செய்ய முடியாது. இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள். நான் யார் அந்த மூன்று பேர்? யாரை அல்லாஹ் நேசிக்கின்றான்? என்று ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களிடம் கேட்டேன்.

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் வழியில் போர் புரிவதற்காக புறப்பட்டு ஜிஹாத் செய்தவாறு அதற்கான கூலியை இறைவன் தருவான் என்ற உறுதி கொண்டவாறு போரிட்டு கொலையுண்டு விட்டார். நீங்கள் அல்லாஹ்வின் வேதத்தில் பார்த்திருப்பீர்கள். அல்லாஹ்வின் வழியில் ஆயுதம் ஏந்தி போரிடுபரை அல்லாஹ் நேசிக்கின்றான். இரண்டாவது மனிதர், ஒருவரது அண்டை வீட்டார் அவருக்கு கஷ்டம் தருகிறார்கள். அவர்கள் அந்த கஷ்டத்தை சகித்துக் கொண்டு வாழ்கிறார். தன்னை தடுத்து வைத்துக் கொள்கிறார். எந்த அளவுக்கு எனில் அவரது வாழ்வுக்கு மரணம் மூலம் இறைவனே போதுமானவனாகி விடும் வரை பொறுமை மேற்கொள்கிறார்.

மூன்றாவது மனிதர், சமுதாயத்துடன் தூக்கம் வரும் வரை பயணம் செய்கிறார். பிறகும் கூட இரவின் பிற்பகுதியில் எழுந்து ஒளு செய்து விட்டு தொழுகிறார்.

எந்த மூன்று மனிதரை அல்லாஹ் விரும்புவதில்லை என்று நான் கேட்டேன். அன்னார் கூறினார்கள்: பெருமை கொண்டு தம்பட்டம் அடிப்பவர். நீங்கள் இறைவனுடைய வேதத்தைப் பார்த்திருப்பீர்கள். தற்பெருமை பேசுபவரை அல்லாஹ் விரும்பவில்லை. மேலும் தான் கொடுத்ததை சொல்லிக்காட்டுபவர்; அடுத்து தனது பொருளை சத்தியம் செய்து விற்பவர்.

இதில் அல்லாஹ்வுக்கு பிடித்தமானவர்களுள் ஒருவர் பொறுமையை மேற்கொள்பவராவார்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஈமானில் பொறுமையின் நிலையானது உடம்பின் தலையைப் போன்றது. பொறுமை இல்லா விட்டால் ஈமானும் இல்லை.

ஒரு முஃமின் எப்போதும் கஷ்டங்களின் போது தமது உணர்வை எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். இதனை அல்லாஹ், அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எப்படி துஆ செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஒரு ஹதீஸில் வருகிறது. உம்மே ஸல்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறக்கேட்டேன். அன்னார் கூறினார்கள். ஒரு மனிதருக்கு கஷ்டம் வருகிறது. உடனே அவர் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறுகிறார். நாங்கள் அல்லாஹ்வுக்கு உரியவர்கள்; அவனிடமே திரும்புவோம். அல்லாஹ்வே! எனது தொல்லைகளுக்குப் பதிலாக நற்கூலி வழங்குவாயாக! இதற்குப் பிறகு எனக்கு இதனை விட சிறந்ததை வழங்குவாயாக!

அல்லாஹ் அவருக்கு நிச்சயமாக அதற்குப் பதிலாக சிறந்த நற்கூலியை வழங்குகிறான். அதற்குப் பிறகு அதனை விட சிறந்ததை வழங்குகிறான்.

இந்த கஷ்டங்கள், சோதனைகள் சொந்த வாழ்விலும் வருகின்றன. ஜமாஅத் விஷயத்திலும் வருகின்றன. சமூக வாழ்விலும் வருகின்றன. எல்லா இடத்திலும் இதுவே அடிப்படை விதியாகும். அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு இந்த கஷ்டங்களை சகித்து பொறுமை, விவேகத்தைக் காட்டி அவனது அடைக்கலத்தில் வந்து அவனிடம் நற்கூலியை கேட்க வேண்டும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் ஏதாவது சோதனையில் சிக்கிக் கொண்டவர்களுக்கு இதனையே கூறுகிறான்.

**இறைவன் கூறுகிறான்:**

**அவர்கள் தங்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள்.**

**இத்தகையோருக்குத் தங்களின் இறைவனிடமிருந்து, அருளும் கருணையும் இறங்குகின்றன. இவர்களே நேர்வழி பெற்றவர்கள். (2:157,158)**

இப்போது நான் அல்லாஹ்வின் பார்வையில் நேர்வழி பெற்ற மக்களது சில சம்பவங்களை எடுத்து வைப்பேன். இவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நெருக்கத்தைப் பெற்றவர்களாவர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருகில் இருந்து பலன் பெற்றவர்கள் அன்னாரின் தர்பிய்யத்திலிருந்து பயனடைந்தார்கள். பொறுமையின் உயர் முன்மாதிரி காட்டினார்கள்.

ஹஸ்ரத் ஆயி-ா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். முஸ்லிம்கள் சோதனைக்கு உள்ளான போது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் கூட மக்காவிலிருந்து ஹப்ஷாவுக்கு வெளியேறினார்கள். அவர் ஓரிடத்தை அடைந்த போது ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர் கேட்டார். அபூபக்கரே! நீங்கள் எங்கு புறப்பட்டு விட்டீர்கள்? ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எமது சமுதாயம் எங்களை வெளியேற்றி விட்டது. எனவே அல்லாஹ்வுடைய பூமியில் எங்காவது ஓரிடத்திற்குப் போய் விடலாம் என்று நினைக்கிறேன். சுதந்திரமாக எங்காவது ஓரிடத்தில் இருந்து எனது ரப்பை இபாதத் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். இப்னு தப்னான் கூறினார். உங்களைப் போன்ற மக்கள் எல்லாம் மக்காவிலிருந்து தானாக வெளியேறவும்

கூடாது. உங்களைப் போன்ற ஒருவரை மக்கள் மக்காவிலிருந்து வெளியேற்றவும் கூடாது. நீங்கள் மறந்து போய் விட்ட நற்செயல்களை நிலைநாட்டுபவர்கள், இரத்த உறவினர்கள் அனைவரிடமும் நல்ல முறையில் நடப்பவர்கள், இயலாதவர்களின் சுமைகைளை சுமப்பவர்கள், விருந்தோம்பல் செய்பவர்கள், வறியவரின் தேவகைளை நிறைவேற்றுபவர்கள் ஆவர். ஆகவே உங்களை நான் எனது அடைக்கலத்தில் எடுத்துக் கொள்கிறேன். என்னோடு திரும்பி வாருங்கள். உங்கள் சொந்த பூமியில் உங்கள் இறைவனை வணங்குங்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் திரும்பி வந்தார்கள். இப்னு தப்னான் என்வரும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் வந்தார். இரவில் இப்னு தப்னான் குறைஷிகளிடம் சென்று கூறினார். அபூபக்கர் போன்ற மனிதர் தானும் வெளியேறமாட்டார். மற்றவர்களை வெளியேற்றவும் மாட்டார். நல்ல பண்புள்ள ஒரு மனிதரை ஊரைவிட்டு வெளியேற்றி விடுவீர்களா?

இப்னு தப்னாவுக்கு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கொடுத்த அடைக்கலத்தை குறைஷிகளால் மறுக்க முடியவில்லை. அவர்கள் கூறினார்கள்: அபூபக்கரிடம் நீங்களே கூறி விடுங்கள். அவர் தனது வீட்டுக்குள்ளேயே தனது இறைவனை வணக்கிக் கொள்ளட்டும். என்ன செய்ய வேண்டுமோ அதனை வீட்டுக்குள்ளேயே செய்யட்டும். அவர் மூலமாக எங்களுக்கு எந்த சிரமமும் வரக்கூடாது. அவர் தனது உணர்ச்சிகளை உரத்த குரலில் வெளிப்படுத்தக் கூடாது. இவர் எமது மனைவி குழந்தைகளையும் குழப்பி விடுவாரோ என்று பயப்படுகிறோம். இப்னு தப்னா இந்த எல்லா விஷயங்களையும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் கூறினார். உடனே ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தனது வீட்டிலேயே தனது இறைவனை வணங்கி வந்தார்கள். தொழும் போது சப்தத்தை உயர்த்தாமல் தொழுதார்கள். மெதுவான குரலில் குர்ஆன் ஓதினார்கள். பிறகு அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. தமது வீட்டு முன் முற்றத்தில் பள்ளிவாயிலை உருவாக்கினார்கள். அங்கிருந்து இபாதத் செய்தார்கள். குர்ஆன் ஓதினார்கள். அப்போது இணை வைப்பவர்களின் குழந்தைகள் விழித்தனர். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களைப் பார்த்து பெரும் தாக்கம் பெற்றனர். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அதிகமாக அழுவார்கள். திருக்குர்ஆன் ஓதும்போது அவர்களின் கண்ணீரை அவர்களால் கட்டுப்படுத்த முடிவதில்லை. கண்ணீர் தாரை தரையாக வழியத் தொடங்கும். குறைஷிகள் மேலும் பதறினர். அவர்கள் இப்னு தப்னாவுக்கு ஒரு தூதுச் செய்தி அனுப்பினர். பாருங்கள். ஒரு நிபந்தனை போட்டு தான் அபூபக்கரை உங்கள் அடைக்கலத்தில் விட்டோம். அவர் தமது வீட்டிலேயே தான் இபாதத் செய்ய வேண்டும். அவர் தமது வீட்டின் முன் முற்றத்தைப் பள்ளியை கட்டி விட்டு உரத்த குரலில் ஓதுகிறார். தொழுகிறார். இவர் எமது குழந்தைகள் பெண்களையும் சோதனையில் போட்டு விடக் கூடாதே என்று பயப்படுகிறோம். நீங்கள் அவரிடம் கேளுங்கள். இவர் உங்கள் அடைக்கலத்தை மறுக்கிறாரா? நாங்கள் அவர் செய்வதை விரும்பவில்லை. நாங்களும் கூட அவருடன் செய்த உடன்படிக்கையை மீறுவோம். ஹஸ்ரத் அபூபக்கருக்கோ இப்னு தப்னாவுக்கோ நாங்கள் அனுமதி அளிக்க முடியாது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இவ்வாறு மக்கள் வந்து இப்னு தப்னாவிடம் முறையிட்டதும் இப்னு தப்னா ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் வந்து கூறினார். அபூபக்கரே! நீர் ஒப்புக் கொண்டபடி நடந்து கொள்ளுங்கள். அல்லது எனது அடைக்கலத்தை விட்டு அகன்று விடுங்கள். இந்த மனிதனுக்காக நான் உடன்படிக்கையை மீறியதாக அரபிகள் பேசுவதை என்னால் சகிக்க இயலாது என்றார். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் உமது (அடைக்கலம் என்ற) அமானிதத்தை திருப்பித் தந்து விடுகிறேன். அல்லாஹ்வுடைய பாதுகாப்பையே விரும்புகிறேன். அதற்குப் பிறகு குறைஷிகள் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு விதவிதமான தொல்லைகள் கொடுத்தனர். ஆனால் அன்னார் உறுதியான பாறை போன்று தமது இடத்தில் உறுதியாக நின்றார்கள். அறிவிப்பில் வருகிறது. குஃப்பார்கள் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை அதிகமாக அடித்தார்கள். அவர்களின் தலையையும் தாடியையும் பிடித்து இழுத்தனர். இதனால் அவர்களின் முடிகள் கூட அதிகமாக உதிர்ந்து போயின. இத்தகைய அநீதிகள் இழைக்கப்பட்டும் அன்னார் பொறுமை காட்டினார்கள்.

இதே நிலை தான் இப்போது பாகிஸ்தானில் உள்ளது. பாகிஸ்தானில் நமது மக்களை தொழவும் விடுவதில்லை. பலவீனமான மக்களை கோபமூட்ட விரும்புகின்றனர். இதனை செய்யத்தான் சட்டம்

இயற்றியுள்ளார்கள். நேற்று பல இடங்களிலிருந்து நமக்கு அறிக்கை வந்துள்ளது. பத்திரிகைகளிலும் செய்தி வெளியிட்டுள்ளார்கள். அஹ்மதிகள் பக்ரீத் அன்று குர்பானி கொடுக்கின்றார்கள். இது இஸ்லாமிய புனித மரபுகளில் உள்ளது. இதனை இவர்கள் செய்வதால் எமது உணர்வு பாதிக்கப்படுகிறது என்று கூறுகின்றனர். காவல்துறையினரிடம் புகார் கொடுக்கின்றனர். காவல்துறை அஹ்மதிகளுக்கு எச்சரிக்கை கொடுக்கிறது. நீங்கள் குர்பானி கொடுப்பதாக இருந்தால் நான்கு சுவருக்குள் வைத்து குர்பானி செய்து கொள்ள வேண்டும். வெளியில் எந்த இஸ்லாமிய உணர்வையும் சிறிது கூட காட்டக் கூடாது. ஏனெனில் குர்பானி கொடுப்பதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தவும் உரிமையில்லை என்று காவல்துறை கூறுகிறது. அஹ்மதிகள் தமது வீட்டிலேயே தான் குர்பானி கொடுக்கின்றார்கள். ஆனால் ஏழை எளியவர்களுக்கு தேடிச் சென்று இறைச்சியை கொடுக்கின்றார்கள். அப்போது கூட குர்பானி இறைச்சி என்று கூறுவதும் இல்லை.

எனவே குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக இதனையெல்லாம் செய்கின்றனர்; அவ்வளவுதான்.

அறிவிப்பில் வருகிறது. உம்மே ஷரிக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட போது குறைஷிப் பெண்களிடம் மறைமுகமாக தப்லீக் செய்து வந்தார். இது பொறுமை மற்றும் நிலைத்து நிற்றல் சம்பந்தமான வியப்பான சம்பவமாகும்.

குறைஷிகளுக்கு விஷயம் தெரிய வந்தது. உம்மே ஷரிக்கின் பகுதிக்கு வந்தனர். நிர்வாணமாக ஒட்டகத்தில் ஏற்றினர். மூன்று நாட்களுக்கு உணவோ தண்ணீரோ தரவில்லை. (அவர்களின் நிலையை எண்ணினால் நமது உணர்வுகள் கட்டுப்பாட்டை இழந்து விடும்.) பிறகு இறக்கி வெளியில் கட்டிப் போட்டனர். ஹஸ்ரத் உம்மே ஷரிக் கூறினார்கள். இதே நிலையில் நான் ஒரு தண்ணீர் பாத்திரத்தைக் கண்டேன். அதிலிருந்து சிறிது தண்ணீர் குடித்தேன். பிறகு அந்த பாத்திரம் என்னை விட்டு சற்று விலகி விடும். மீண்டும் சிறிது தண்ணீர் குடிப்பேன். பிறகு அது விலகிப் போய் விடும். இவ்வாறு நன்றாக நான் தாகம் தீரும் வரை நடந்தது. ஹஸ்ரத் உம்மே ஷரிக் நன்றாக குடித்த பிறகு மீதி இருந்த தண்ணீரை தன் மீது ஊற்றிக் கொண்டார். அம்மக்கள் விழித்துப் பார்த்த போது அன்னார் நல்ல நிலையில் இருப்பதையும் தண்ணீரின் அடையாளம் அவர்கள் மீது இருப்பதையும் கண்டனர். அப்போது அம்மக்கள், கயிற்றை அவிழ்த்து விட்டு எங்களது தண்ணீரையா குடித்து விட்டாய் என்று ஹஸ்ரத் உம்மே ஷரிக் அவர்களிடம் கேட்டார். அதற்கு அவர், அல்லாஹ்வின் மீது ஆணை! நான் அவ்வாறு செய்யவில்லை என்று கூறி நடந்த சம்பவத்தைக் கூறினார். உடனே அவர்கள் கூறினர். நீர் சொல்வது போன்று நடந்திருக்கும் என்றால் உனது மார்க்கம் சரியானது தான் என்று தமது தண்ணீரைப் பார்த்தபோது தாம் வைத்திருந்த தண்ணீர் அப்படியே இருந்தது. இவ்விஷயம் அவர்களையும் இஸ்லாத்திற்கு கொண்டு வந்தது. இதுவும் ஓர் விநோதமான சம்பவமாகும். மூன்று நாள் தாகத்தை அல்லாஹ் தானே தண்ணீர் தந்து தணித்து வைத்தான். பிறகு ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ ருகை இவர் பனூ அப்துத்தார் உடைய அடிமை. இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவரை இஸ்லாத்தில் இருந்து திரும்புமாறு கூறி கஷ்டங்கள் தந்தனர். ஆனால் அன்னார் மறுத்து விட்டார். பனூ அப்துத்தார் கடும் வெயிலில் மதிய வேளையில் அன்னாரது ஆடைகளைக் கழற்றி இரும்பின்மீது கட்டி வைத்தனர். பிறகு ஒரு பாறையை அவர்கள் இருப்பின் மீது வைத்தனர். அவர்களுக்கு மூச்சு முட்டியது.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுடைய சம்பவம் இவ்வாறு வருகிறது. உமையா பின் கல்ப் உடைய ஹபஷி அடிமையாக ஹஸ்ரத் பிலால் (ரலி) இருந்தார்கள். உமையா அவரை மதிய வேளையில் கடும் வெயிலில், பூமியில் படுக்க வைத்து அவர்கள் மீது பெரும் கற்களை வைத்து, லாத் உஸ்ஸாவை வணங்க வேண்டும். முஹம்மதை மறுத்து விட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இப்படி சித்ரவதை செய்தே கொன்று விடுவேன் என்றான். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அஹது அஹது – அல்லாஹ் ஒருவன் அல்லாஹ் ஒருவன் என்றே மறுமொழி கூறினார்கள். ஒருமுறை இந்தக் காட்சியை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கண்டபோது உமையா பின் கலஃப்க்கு ஒரு அடிமையைக் கொடுத்து ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை வாங்கி விடுதலை செய்து விட்டார்கள்.

பிறகு இதுபோன்று இன்னொரு அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்களை அருகில் அழைத்து முக்கிய பிரமுகரின் இருக்கையில் அமர்த்தினார்கள். கப்பாப்! இந்த மஸ்ஜிதில் என் அருகில் அமர்வதற்கு நீர் தான் தகுதி உடையவர். இந்த மஸ்ஜிதில் இருப்பவர்களில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை விட வேறு எவரும் அதற்கு தகுதியானவர் இல்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது கப்பாப் கூறினார்கள். ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன்! ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இந்த அவையில் உங்கள் அருகில் அமர்வதற்கு உரிமை உண்டுதான். எனினும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு கூட இணை வைப்பவர்களிடமிருந்து அவரைக் காப்பாற்ற ஆள் இருந்தது. ஆனால் அக்காலத்தில் எனக்கு அதுகூட இருந்ததில்லை.

ஒருநாள் காஃபிர்கள் என்னைப் பிடித்து நெருப்பை மூட்டி எனக்கு சூடுபோட்டனர். ஒருவர் என் நெஞ்சில் காலை வைத்தான். பிறகு அன்னார் ஆடையைக் கழற்றி தனது இடுப்பை காட்டினார்கள். இடுப்பில் தோல் எரிந்து தழும்பு வெள்ளையாக காணப்பட்டது. ஹஸ்ரத் கப்பாப் வாள் கத்திகளை உருவாக்குவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து செல்வார்கள். இவர்கள் வந்து செல்வது எதிரிகளுக்கு தெரிந்தது. ஒரு இரும்பை பழுக்க வைத்து தலையில் வைத்தனர். ஹஸ்ரத் கப்பாப் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அவையில் இதனை குறிப்பிட்ட போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்காக துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! கப்பாப் –ற்கு உதவி செய்வாயாக. அந்த துஆவின் விளைவாக அவருடைய எஜமானருக்கு தலையில் ஒரு நோய் ஏற்பட்டது. நாயின் தலையைப் போன்று ஆகிவிட்டது. மருத்துவர் வந்து பார்த்து விட்டு, பழுத்த இரும்பை இவரது தலையில் வைக்குமாறு கூறினார். ஹஸ்ரத் கப்பாப் கூறினார். பிறகு அவரது தலையில் நான் பழுத்த இரும்பால் சூடு போட்டேன். அல்லாஹ் இவ்வாறு அவனை பழிவாங்கினான்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி), ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபிகள் கஷ்டப்படுவதைப் பார்த்தார். அப்போது அன்னார் வலீத் பின் முகைராவுடைய அடைக்கலத்தில் வாழ்ந்து வந்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒரு இணை வைப்பவரின் அடைக்கலத்தில் இரவும் பகலும் வாழ்வது எனது நஃப்ஸ் கெட்டுப் போய் விட்டதன் விளைவாகும். ஏனெனில் எனது மார்க்க சகோதரர்கள் கஷ்டங்களை சகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதியவாறு வலீது பின் முகைராவிடம் வந்து, அப்துஷ் ஷம்ஸின் தந்தையே! உமது அடைக்கலத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். அவர் கேட்டார். எனது சகோதரரின் மகனே! ஏன் உனக்கு எனது சமுதாயத்தால் எதுவும் கஷ்டம் நேர்ந்து விட்டதா? அன்னார் கூறினார்கள். இல்லை. நான் அல்லாஹ்வின் அடைக்கலத்தையே விரும்புகிறேன். நான் அவனது அடைக்கலத்தை தவிர வேறு எவரது அடைக்கலத்தின் கீழும் வர விரும்பவில்லை. வலீத் கூறினார். என்னோடு பள்ளிக்கு (கஃபாவுக்கு) வா. நான் எவ்வாறு அங்கு வைத்து உனக்கு அடைக்கலம் தருவதாக அறிவித்தேனோ அதேபோன்று நீயும் எனது அடைக்கலத்தை திரும்பத் தருவதாக அங்கு வைத்து அறிவித்து விடு. ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் கூறுகிறார். நாங்கள் பள்ளியை (கஅபாவை) வந்தடைந்தோம். வலீது கூறினார். இவர் உஸ்மான். எனது பாதுகாப்பை இப்போது என்னிடமே திருப்பித் தந்து விட வந்துள்ளார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். இவர் கூறுவது சரிதான். நான் இவரை எனக்கு முழுமையாக பாதுகாப்பு தருபவராகவும் கண்ணியமிக்கவராகவும் கண்டேன். ஆனால் நான் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரது அடைக்கலத்திலும் வரவிரும்பவில்லை. எனவே இவரது அடைக்கலத்தை அவரிடமே திருப்பித் தந்து விட்டேன். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் போய் விட்டார். லபீஸ் பின் ரபிஆ என்பவர் குறைஷிகளின் அவையில் ஒரு கவிதை பாடினார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் அந்த அவையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது ஸபீஸ் கவிதை பாடினார். அல்லாஹ்வைத் தவிர மற்ற அனைத்தும் அழியக் கூடியவையே. உடனே ஹஸ்ரத் உஸ்மான் கூறினார்கள். நீர் சொல்வது சரி. லபீஸ் அடுத்த அடியை பாடினார். ஒவ்வொரு நிஃமத்தும் முடிந்து போய் விடக்கூடியவை. உடனே உஸ்மான் (ரலி) கூறினார். நீர் பொய் கூறுகிறீர். ஜன்னத் உடைய நிஃமத் முடிவடையாது. லபீஸ் பின் ரபிஆ கூறினார். குறைஷிகளே! முன்னர் நீங்கள் எனக்கு இது மாதிரி கஷ்டம் எல்லாம் கொடுத்ததில்லையே? எப்போது இருந்து இப்படி ஆரம்பித்தீர்கள்? அப்போது ஒருவர் கூறினார். இவரது நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் ஒரு அறிவற்றவர். அவர் இதுபோன்றவர்களை

சேர்த்துக் கொண்டு நம்மை விட்டு பிரிந்து வாழ்கிறார்கள். எனவே இவர் (உஸ்மான்) செய்வதை கேட்டு நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உடனே உஸ்மான் (ரலி) அவர்கள் அதற்கு பதிலளித்தார்கள். உடனே பேச்சு முற்றியது. ஒரு மனிதர் எழுந்து ஹஸ்ரத் உஸ்மானுடைய கண் மீது குத்தினார். இதனால் கண் பிதுங்கி விட்டது. இவை அனைத்தும் வலீது பின் முகைரா பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! சகோதரரின் மகனே! நீர் மட்டும் எனது பாதுகாப்பில் இருந்தால் உமக்கு ஏற்பட்ட இந்த துயரம் நடந்திருக்காதல்லவா? ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனது இன்னொரு கண்ணுக்கும் கூட இது ஏற்படட்டும். அப்துஷ்ஷம்ஸின் மகனே! நான் இப்போது யாருடைய பாதுகாப்பில் இருக்கிறேனோ அவன் உம்மை விட கண்ணியம் மிக்கவன். மிகவும் வல்லமை உள்ளவன். வலீது பின் முகைரா கூறினார். எனது சகோதரரின் மகனே! வா இப்போதேனும் எனது அடைக்கலத்தில் இரு என்றார். ஹஸ்ரத் உஸ்மான் அதனையும் மறுத்து விட்டார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பிற்கு சஹாபாக்கள் பொறுமையின் புதிய வடிவம் தந்தார்கள்.

ரஜி என்ற இடத்தில் சஹாபாக்கள் அடைத்து வைக்கப்பட்டார்கள. அவர்களுள் ஒருவர் ஸைத் பின் தஸன்னா என்பவரும் ஒருவர். ஸப்வான் பின் உமைய்யா என்பவர் அவரை விலைக்கு வாங்கினார். அதுவும் தமது தகப்பனாருக்காக இவரை கொலை செய்து பழிவாங்குவதற்காக வாங்கினார். ஸைதை வெட்டுவதற்காக எடுத்துச் செல்லும் போது அபூஸுப்யான் கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். ஸஅதே! நீ உனது குடும்பத்தாரிடம் திரும்பிச் செல்வதையும், உமது இடத்தில் முஹம்மத் (ஸல்) கொலை செய்யப்படுவதையும் விரும்புவாயா? ஹஸ்ரத் ஸைத் கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் என் வீட்டினருடன் இருந்து கொண்டிருக்க அல்லாஹ்வின் தூதரின் காலில் ஒரு முள் குத்துவதைக்கூட விரும்பமாட்டேன் என்று கூறினார். ஹஸ்ரத் அபூஸுப்யான் கூறினார். முஹம்மத் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் அன்னார் மீது வைத்திருந்த அன்பை நான் வேறு எங்கும் கண்டதில்லை. பிறகு தாய்மார்களும் குழந்தைகளுக்கு அவ்வாறே பொறுமையின் நற்போதனையை செய்து வந்தனர்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் ஷஹீதாக்கப்பட்ட அன்று அவரது தாயாரிடம் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் வந்தார்கள். தாயார் கூறினார்கள்: மகனே கொலைக்குப் பயந்து இத்தகையவர்களை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாதே. என்னதான் இழிவு ஏற்பட்டாலும் சரி. கண்ணியத்துடன் மரணிப்பது இழிவுடன் குதிரையின் காலால் அடிவாங்கி பிழைப்பதை விட சிறந்தது. இதில் தாய்மார்களுக்கு இருக்கிற உறுதி தெரிய வருகிறது. அவர் தனது மகனுக்கு கூறிய அறிவுரை ஒருபோதும் ஈமானில் பலவீனம் காட்ட வேண்டாம். தியாகம், பொறுமை ஆகியவற்றின் இந்த வியத்தகு முன்மாதிரி இஸ்லாத்தில் ஆண்கள், பெண்கள் வயோதிகர், இளைஞர் என எல்லா நிலையிலும் காண முடிகிறது.

இந்த முன் மாதிரிகளை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நமது நபி (ஸல்) அவர்கள் தமது காலத்தில் தான் வலிய வந்து ஒருபோதும் வாளேந்தியதில்லை. மாறாக நீண்ட காலம் வரை குஃப்பார்களின் கையால் துன்பமிழைக்கப்பட்டனர். அவர் காட்டிய பொறுமை மனிதனின் பணியே அல்ல. அதுபோன்று அவர்களின் சஹாபாக்களும் இதே அடிப்படையை பின்பற்றினர். கஷ்டத்தை அனுபவியுங்கள்; பொறுமையை மேற்கொள்ளுங்கள் என்ற அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையை உண்மையுடன் மேற்கொண்டார்கள். அவர்களின் கண் முன்னால் குழந்தைகள் துண்டு துண்டாக்கப்பட்டனர். நெருப்பின் மூலமும் தண்ணீர் மூலமும் தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால் விஷமிகளுக்கு எதிரில் உறுதியுடன் நிலைத்து நின்றார்கள். பால் குடிக்கும் குழந்தைகள் போன்று எந்த பதிலடியும் தராமல் நின்றனர். உலகில் எந்த நபியின் சமுதாயம் இறை கட்டளை என்று கேட்டவுடன் அதற்கு முன் எளிமையுடன் தம்மை அர்ப்பணித்தது? அதுவும் இந்த சஹாபாக்கள் செய்தது போன்று செய்து காட்டியதாக எவர் நிரூபிக்க முடியும்?

வீரம், ஜமாஅத், ஆற்றல் எல்லாம் இருந்தும் கூட இரத்தம் சிந்த விரும்பும் எதிரிகளுக்கு எதிரியில் பதிமூன்று ஆண்டுகள் வரை பொறுமை செய்து வந்ததாக எந்த சமுதாயம் நிரூபித்துக் காட்ட முடியும்? நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சமுதாயம்தான் அதனை செய்தது. இவ்வாறு

செய்வதற்கு அவர்களை பலவந்தப்படுத்தியது எதுவுமில்லை. இந்த அளவுக்கு பொறுமை காட்டிய சஹாபிகளின் கைகள் ஜிஹாதிற்கு அனுமதி கிடைத்த போது காட்டிய வீரம் பல நேரங்களில் ஆயிரக்கணக்கான சஹாபாக்கள் இலட்சக்கணக்கான எதிரி சிப்பாய்களை சின்னாபின்னப்படுத்தினர். அதன் மூலம் மக்காவில் இரத்தம் சிந்திய போது நாங்கள் காட்டிய பொறுமை கோழைத்தனத்தாலோ பலவீனத்தாலோ அல்ல. மாறாக இறைவனது கட்டளையைத் கேட்டு தான் ஆயுதங்களை கீழே போட்டிருந்தோம் என்று உலகிற்கு புரிய வைத்தனர். ஆடு மாடுகளைப் போன்று அறுக்கப்பட தயாராகினர். நிச்சயமாக இந்த பொறுமை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. நாம் எந்த நபிமார்களின் வரலாற்றை படித்துப் பார்த்தாலும் எதிலும் இந்த உயர் நல்லொழுக்கத்தை பார்க்க முடியாது. முன்னோர்களின் சம்பவங்களை நாம் கேட்டுள்ளோம். உடனே அவர்களின் பொறுமைக்கு ஒருவேளை அவர்களது தைரியமின்மை குறைந்த ஆற்றல் காரணமோ என்ற எண்ணம் கூட தோன்றலாம். ஆனால் யுத்தக்கலை தெரிந்து வீரம் ஆற்றல் நிறைந்த உள்ளம் உடையவராகவும் இருந்து பிறகு கஷ்டம் கொடுக்கப்பட்டால் அவர்களது குழந்தை கொலை செய்யப்பட்டால், காயப்படுத்தப்பட்டால் அதன் பிறகும் கூட இந்த தீமைக்கு எதிரில் நிற்கவில்லையெனில் இத்தகைய ஓர் ஆண்மை பதிமூன்று ஆண்டுகால முழுமையான காலகட்டத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமும் அவர்களின் சஹாபாக்களிடமும் இருந்து வெளிப்பட்டது. இத்தகைய காலம் பதிமூன்று ஆண்டுகள் வரை நீண்டது. உண்மையில் இது ஒப்புமையற்றது. ஒருவருக்கு இதில் சந்தேகம் இருந்தால் கடந்த கால நல்லடியார்களுள் இத்தகைய பொறுமை காட்டியவர் யார் என்று சொல்லுங்கள். இங்கு இன்னொரு விஷயமும் நினைவில் கொள்ளத்தக்கது. சஹாபாக்கள் மீது காட்டப்பட்ட இந்த அநீதியின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பொறுமை காட்டுமாறு தான் கூறி வந்தார்கள். எவராவது எதிர் நிற்க விரும்பினால் கூட நமக்கு பொறுமை செய்யுமாறு தான் கட்டளை என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எப்போதும் பொறுமையையே போதித்தார்கள். எதிர்த்து நிற்குமாறு கட்டளை வரும் வரை அதையே செய்தார்கள். இதுபோன்ற ஒரு பொறுமையின் காட்சியை ஆரம்பத்திலும் கடைசியிலும் உள்ள எல்லா காலத்திலும் தேடுங்கள். ஹஸ்ரத் மூஸா (அலை),, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய சமுதாயத்தில் இத்தகைய பொறுமையை காண முடிந்தால் எமக்கு கூறுங்கள். அல்லாஹ் நமக்கும் கூட எப்போதும் பொறுமையை காட்டுவதற்கு தவ்ஃபீக் வழங்குவானாக. குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் அஹ்மதிகள் மீது கடுமை காட்டப்படுகின்ற மற்ற இடங்களில் வாழும் அஹ்மதிகளுக்கு பொறுமைக்கு வாய்ப்பளிப்பானாக. அவர்களது எதிரிகளை தனது சிறப்பான வல்லமையினால் மாற்றுவதற்கான ஆயத்தங்களை செய்வானாக. நமது ஒவ்வொரு அமலும் இறைவனது திருப்தியை ஈர்ப்பதாக இருக்கட்டுமாக. நாம் இறைவனது அருளுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வோமாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 19.11.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**